DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No.981/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for PW1
Defence

Name : Thanigaivel

Father Name /
Husband Name : Mani

Village : KIliyanur

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 29th October 2025.

சத்தியபிரமாண வாக்குமூலம்

08.08.2025 அன்று காலை 11.30 மணியளவில் எனது தம்பியின் இருசக்கர வாகனம் விபத்து ஏற்பட்டது சம்மந்தமான கிளியனூர் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்தில் உள்ள திண்ணையில் அமர்ந்திருந்தேன். அப்போது காவல் ஆய்வாளர் கலையரசி அவரது ஜீப்பில் வந்து இறங்கினார். ஆனால் நான் அவர் வந்ததை கவனிக்காமல் அமர்ந்திருந்தேன். அப்போது அவர் டேய் ஏன் இங்கு உக்காந்திருக்க எழுந்திருடா என்று என்னை பாாத்து சொன்னார். அதற்கு நான் நீங்கள் வந்ததை நான் பார்க்கவில்லை அம்மா செல்லை பார்த்துகொண்டு இருந்தேன் என்று சொன்னேன். செல்லை பார்ப்பதற்கு இது என்ன உன் அப்பன் வீடா தொலைத்துவிடுவேன் என்று சொன்னார். அதற்கு நான் நீங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை அம்மா என்று சொன்னதற்கு நான் யார் தெரியுமா தூக்கி உள்ளே வைத்து தொலைத்துவிடுவேன் என்று சொன்னார். நான் சசிகலா வீட்டு சொந்தக்காரர் என்று

சொல்லி என்னை மிரட்டி நீ என்ன பெரிய மயிரா என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார்.

மேற்கூறியவாறு அசிங்கமாக திட்டிக்கொண்டு காவல் நிலையத்தில் உள்ளே சென்று விட்டு அங்கிருந்த போலசாரிடம் இவனை தூக்கி உள்ளே உட்கார வையுங்கள் என்று FIR போட்டு Remand பண்ணுங்கள் என்றும் சொன்னார். உடனே உள்ளே இருந்து எல்லா போலீசாரும் வெளியே வந்தார்கள். அவர்களிடம் நான் செல்லை பார்த்துகொண்டு இருந்தேன் என்றும் ஆய்வாளர் வந்ததை பார்க்கவில்லை என்றும் சொன்னேன். அதற்கு அவர்களும் உன்மீது எந்த தவறும் இல்லை என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்கள். என்னையும் அனுப்பி விட்டார்கள்.

தொடர்ச்சியாக காவல் ஆய்வாளர் பொதுமக்கள் யார் வந்தாலும் இவ்வாறு நடந்து கொள்வார். பணம் கேட்டு அனைவரையும் மிரட்டுவார். மேற்படி காவல் ஆய்வாளரின் செய்கை குறித்து கோட்டக்குப்பம் காவல் துணைகண்காணிப்பாளர் , விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் மற்றும் விழுப்புரம் DIG அலுவலகத்திற்கும் தபால் மூலம் புகாரை அனுப்பி வைத்தேன். இதை தெரிந்து கொண்டு காவல் ஆய்வாளர் கலையரசி அவர்கள் என்மீது மேலதிகாரிகளிடம் புகார் கொடுத்தால் என்னை என்ன செய்துவிடுவார்கள் என்றும், இந்த காவல் நிலையத்தை விட்டு நான் செல்வதற்கு முன்பு உன்னை என்ன செய்கிறேன் பார் என்று என்னை மிரட்டினார். எனது புகாருக்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் தற்போது இந்நீதிமன்றத்ததை நாடியுள்ளேன். எனவே காவல் ஆய்வாளர் கலையரசி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்)/- XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்.